1155

உ

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; ஜய. மாசி, உ௰ 4—3—55 தளிர்—22

1955

## அன்புடைமை

அன்பு உடலையும் உயிரையும் ஒன்றவைக்கும் பற்றாசு போன்றது. அன்பே யாக்கைக்கு உயிராம். அஃதின்றேல் யாக்கை செயல்படுவதும் சிறப்பதும் அருமையே. உடல் உயிரோடு பொருந்தியியங்குவது என்பது அன்போடு இயைந்து ஒழுகுதற்காம். பிறர் துன்பம் கண்டுழி உணர்ச்சி மேம்பட்டால் அன்பு நீர் ஆறாக ஊற்றெடுக்கும். அதைத் தடுத்தலென்பது யார்க்கும் அரிதாம், இத்தகைய நிலை வளரவளரத் தன்னலம் சுருங்கும், பொது நலம் விரியும்.

அன்பு முழுமையாக உருக்கொள்வதற்கு ஏற்ற வாயிலாக அமைவது இல்லறமே. அன்பே இல்லறத்தானை இயல்புடைய மூவர்க்கும். துறந்தார், துவ்வாதார், இறந்தார் என்ற மூவர்க்கும்; தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்னும் ஐவர்க்கும் உற்ற துணையாகும்படி உந்துவதாம். எனவே, வாழ்க்கைத் துணைவரிடத்தில் அரும்பும் அன்பே, மக்களிடத்தில் மலர்ந்து, உலகத்தாரிடத்தில் கனிந்து பயன் கொழிக்கிறது எனலாம்.

ஒருவரின் இன்பப்பேறு இல்வாழ்க்கையேயாகும். அதுவே அன்பின் அடிப்படையில் அமைவதாகும். இவ்வாறு அன்பில் முகிழ்த்து இன்பம் பயப்பதாகிய இல்லறப் பயனை நுகர்ந்தாரே உலகத்தாரால் பெரிதும் போற்றப்படுவர் என்பதில் வியப்பேது!

அன்பில் விளைவது ஆர்வம். அந்த ஆர்வத்தின் பயனாகத் திகழ்வதே நட்பென்னும் சிறப்பு.

அன்பு அறத்திற்கு மட்டும் துணையன்று, மறத்திற்கும் அஃதே துணை அஃது எவ்வாறு? இல்வாழ்க்கையில் நின்று வாழ்க்கைத் துணையேற்று, மக்கட்பேறுற்று, அன்பு ஊற்றுத் திறக்கப் பெற்றவரிடத்தில் எச்செயலும் அன்புவழியே திகழும் என்றவாறு.

அன்பில்லாச் செயலால் விளைவது தீமையே. அத்தகைய தீமைக்குக் காரணமாயிருக்கும் அன்பில்லாதவனை அறம் ஒறுத்தே தீரும். அவன் நிலை. "கொடிய பாறை நிலத்திலே உலர்ந்த மரம் தழைப்பதைப் போலவும், என்பில்லாப்புழு வெயிலில் துடிப்பதைப் போலவுமாகும். தினைவிதைத்தவன் தினை அறுப்பதும் வினை விதைத்தவன் வினை அறுப்பதும் இயற்கை தானே!

சி. தாமோதரம்.

## சோழநாட்டுத் தல யாத்திரை

—

குருகுலத்தார் மட்டும்
15-3-55க்குள்
பெயர் பதிவு
செய்து கொள்ளலாம்.

*

நுழைவுக் கட்டணம்
ஒரு ரூபா மட்டும்.

*

குறிப்பு:—குருகுலத்தில் சேராதவர்கள் யாத்திரையில் கலந்துகொள்ள விரும்பினால், குருகுலத்தில் முதலில் சேர்ந்து அதன் பின் யாத்திரையில் கலந்துகொள்ளலாம்.

—சே.

—

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

| இலை | செய, மாசி, | | தளிர் |
|---|---|---|---|
| 7 | 4-3-55 | வெள்ளி. | 22 |

# நொண்டி மாடு

[தமிழர்களிடையே ஒற்றுமை உணர்ச்சி அவசியம். மக்களாட்சியில் நியாயமான கோரிக்கைகளை எடுத்துச் சொல்வதற்குப் பயம் இருக்கக்கூடாது. 5 ஆண்டுத் திட்டத்தில் கொஞ்சம் கூடுதலான பங்கு கேட்கத் தமிழ்நாட்டிற்கு உரிமை இருக்கிறது. அனைவருக்கும் ஒத்த முன்னேற்றம் அளித்தல் வேண்டும்" என்ற பல கருத்துக்களை ஆசிரியர் இங்கு விவரித்து எழுதுகிறார்.]

நொண்டி மாடு மந்தையோடு போய் மேய்வது அந்த மந்தைக்கும் இடையூறு; நொண்டி மாட்டுக்கும் இடையூறு; மேய்ப்பவன் அதன்மேல் கொஞ்சம் கருத்தாக இருந்தால் ஒரு சிறு நன்மையும் ஏற்படலாம்; மேய்ப்பவனும் அதைப் பொருட்படுத்தாமல் விட்டால் மந்தையின் நிலையைவிட அந்த மாட்டின் நிலை மிக இரங்கத்தக்கதாகும்.

இந்திய அரசாங்கத்தில் ஒரு பகுதியாக உள்ள தமிழ் நாட்டின் நிலை நொண்டிமாட்டின் நிலையாகவே இருக்கிறது.

வடகோடி:

இந்திய அரசாங்கத்தின் தலைமை வடகோடியில் டில்லி நகரத்தில் உள்ளது. விஞ்ஞான வளர்ச்சியால் வேகமான போக்கு வரவு கருவிகள் ஏற்பட்ட பிறகு, இவ்வாறு வடகோடியும், தென்கோடியுமாக இருப்பதால் இடர்ப்பாடு ஒன்றும் இல்லை எனலாம். தொலைவு என்ற இந்த ஒருகாரணம் மட்டும் இருந்தால் இது உண்மையே ஆகும். ஆனால் வேறு சில குறைகளும் உடன் சேரும்போது, தொலைவில் இருத்தல் குறைகளுக்குத் துணை செய்வது போல் ஆகிறது.

கேரளநாடும் தென்கோடிதான்; தமிழ் நாட்டைவிடச் சிறிது தென்கோடி என்றும் கூறலாம். நொண்டி மாட்டின் நிலை அதற்கு இல்லை. கேரள நாட்டு மக்கள் இந்திய அரசாங்கத்திலும் வெளியிலும் மிக நல்ல நிலைகளில் இருந்துகொண்டு செல்வாக்கு உடையவர்களாய்த் தம் நாட்டைக் காத்துக்கொள்கின்றனர்.

கேரளத்தாராகிய மலையாளிகள் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ ஒருவரை ஒருவர் காண நேரும்போது உறவினரைக் காண்பதுபோல் உள்ளம் மகிழ்ந்து உறவாடுகிறார்கள். ஆனால் தமிழர் ஒருவரை ஒருவர் காணும்போது எப்படியோ பொறாமை நோக்கு ஏற்பட்டுவிடுகிறது. ஒரே கட்சியைச் சார்ந்த தமிழர்களுக்குள்ளேயே இப்படிப் பொறாமை என்றால் எதிர்க் கட்சியாரைப் பார்க்கும்போது எப்படி அன்போடு பழகமுடியும்? மலையாளிகளுக்குள் வேறு வேறு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், ஒரே இனம் என்ற பற்றும் ஒருவர்க்கு ஒருவர் உதவி செய்வது கடமை என்ற உணர்ச்சியும் இருக்கின்றன. ஆனால் தமிழர்களுக்குள் இந்த நிலைமை பெரும்பாலும் இல்லை. ஒரு தமிழன் வாழ்வைக் கெடுப்பவன் பெரும்பாலும் இன்னொரு தமிழனாகவே இருக்கிறான். அயலான் சூறுக்கிட்டுத் தமிழனைக் கெடுக்கும்போதும் தன் கையால் அவன் கண்ணைக் குத்தாமல் இன்னொரு தமிழனுடைய கையைக் கொண்டே குத்துகிறான். தமிழன் இன்னொரு தமிழனைப் பார்த்தும், முடியுமானால் ஆங்கிலத்தில் பேசவே முற்படுகிறான். தமிழ் நாட்டிற்குள்ளேயே இந்த நிலை காணப்படுகின்றது. ஆனால் ஒரு மலையாளி மற்றொரு மலையாளியை லண்டன் மாநகரத்திலோ நியூயார்க் நகரத்திலோ கண்டாலும் உடனே மலையாள மொழியே அவர்களின் வாயில் வருகிறது. இந்த அளவிற்குத் தமிழருக்குத் தாழ்வு மனப்பான்மை இருக்கிறது; மலையாளிகளுக்குத் தன் மதிப்பு (சுயமரியாதை) இருக்கிறது. தமிழ் நாடு நொண்டிமாடாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

விதிவிலக்கு இல்லாமற்போகவில்லை. தமிழர்களுக்குள் நல்லவர்கள், நாட்டுப்பற்றும் மொழிப்

பற்றும் உடையவர்களில் சிலர் இருக்கிறார்கள் ஆனால் அவர்களின் தொகை போதாது; ஒரு நாட்டைக் காக்கும் அளவிற்கு அந்தத் தொகை பெருகவில்லை; மற்ற மொழியர்களுள் அப்படிப் பட்டவர்களின் தொகையே பெருகியுள்ளது.

### மொழிவாரி மாகாணம்

நொண்டி மாடு என்பதை விளக்குவதற்கு இன்னொன்றை எடுத்துக் காட்டாகப் பார்ப்போம். மொழிவாரி மாகாணம் வேண்டும் என்று ஆந்திரர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அவ்வாறு பிரிப்பது நாட்டு ஒற்றுமைக்குக் கேடு என்று மத்திய அரசாங்கம் தடை செய்து வற்புறுத்தியது. ஆந்திரநாடு நொண்டி மாடாக இருக்கவில்லை. அன்பு முறை (அஹிம்சையான வேண்டுகோள்) பலிக்காதது கண்டு, வன்பு முறையைக் கையாண்டது. கட்சி வேறுபாடு முதலியவைகளை அப்போதைக்கு மறந்து பாடுபடுவது கடமை என்று உணர்ந்து, அனைவரும் ஒன்றுபட்டார்கள்; போராடினார்கள். ஆந்திரப் பத்திரிகைகளும் கடமையுணர்ச்சியோடு கிளர்ச்சி செய்தன. கூடாது என்று தடுத்த மத்திய அரசாங்கமே வந்து திறப்புவிழா நடத்தும்படியாகச் செய்துவிட்டார்கள். ஆந்திர மாகரணம் அமைத்துக்கொண்டார்கள். தமிழ் நாட்டார் அவ்வாறு பொது வேலைக்கும் ஒன்றுபடுவதில்லை; தமிழ் நாட்டுப் பெரிய பத்திரிகைகள் மத்திய அரசாங்கத்தின் விளம்பரக் கருவிகளாக இருக்கின்றனவே தவிர, தமிழ் மக்களின் உள்ளத்தை எடுத்துக் காட்டுவனவாக இல்லை.

திருவாங்கூரில் சேர்ந்துள்ள நாஞ்சில் நாடு முழுக்க முழுக்கத் தமிழ் நாட்டோடு சேரவேண்டிய தமிழர் வாழ்ந்து வரும் தமிழ்ப்பகுதியாகும். அதைத் தமிழ் நாட்டோடு சேர்க்கவேண்டும் என்று ஒரு கிளர்ச்சி நடந்தது. அப்போது தமிழ் நாட்டுப் பெரிய பத்திரிகைகள், தலைமையாசிரியருக்குப் பயந்த சிறுபிள்ளைகள்போல்— வாய்மூடி மவுனியாக இருந்தன. மத்திய அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளைகளாக நடக்க ஆசைப்பட்ட சில பத்திரிகைகள் கிளர்ச்சியைக் கண்டித்தும் எழுதின. கிளர்ச்சி போராட்டமாக வளர்ந்த பிறகும் இதே நிலைமை நீடித்தது. "இது எங்கள் நாடு" என்று மலையாளிகள் எதிர்ப்பதற்கு வேண்டிய காரணம் ஒன்றுமே இல்லை. ஆனாலும் மத்திய அரசாங்கம் வாய்மூடி இருக்குமாறு தமிழர்க்கு அறிவுறுத்தியது. பொலீஸ் தடியடி, துப்பாக்கிச் சுடுகை முதலியன நடந்தன. தமிழர் சிலர் உயிரும் போயிற்று அப்போதும் தமிழ் நாட்டுக் கட்சிகள் சில அமைதி மேற்கொண்டன. பத்திரிகைகளும் வழக்கம்போல் இருந்தன. திருவாங்கூரில் துப்பாக்கிச் சுடுகைக்கு அனுமதி அளித்த அரசாங்கத்தை அதன் கட்சியே கண்டித்தது; இந்த அடாத செயலுக்காகப் பதவியை விட்டு விலக வேண்டும் என்று வட இந்தியாவில் அந்தக் கட்சியார் கிளர்ச்சி செய்தார்கள்; ஆனால் உயிர்ப்பலி தந்த தமிழர்கள் மட்டும் ஒரு கிளர்ச்சிக்கும் வழியின்றி அமைதியாக இருந்துவிட்டார்கள். நொண்டிமாடு என்பதை விளக்குவதற்கு இதுவும் ஒரு சான்று ஆகும்.

### அன்பும் ஆதரவும்

தமிழ் நாட்டோடு இணைக்கப்படாமல் குறையாக உள்ள சித்தூர் மாவட்டத்தின் சில பகுதிகளும் மேற்குறித்த நாஞ்சில் நாடும் இணைக்கப்படுவதால் மத்திய அரசாங்கத்திற்கு ஒரு தீங்கும் இல்லை. அதற்கு மாறாகத் தமிழருடைய அன்பையும் ஆதரவையும் வளர்த்துக் கொள்வதற்கு அது வழி ஆகும். அதுபோலவே, தமிழ் நாட்டோடு ஒட்டாமல் ஒட்டியுள்ள வேண்டாத பகுதிகளாகிய கன்னடத் துண்டையும் விட்டுப் பிரிவது தமிழருடைய ஆவல். அதற்கும் தடை இருந்து வருகிறது. மொழிவாரி மாகாணப் பிரிவினையில் நல்லெண்ணம் இல்லாதவர்களிடம் இதைப் பற்றி எண்ணிக் கூறும் பொறுப்பு இருக்கிறது. தமிழர் பலர் அமைச்சர் உள்பட இந்த மாறுதல் ஏற்பட வேண்டும் என்று உள்ளத்தில் விரும்புகிறார்கள். ஆனால் வெளியே சொல்வதற்குத் தயங்குகிறார்கள். மத்திய அரசாங்கத்திடம் ஏதோ ஒரு பயம் இருந்து வருகிறது. ஜனநாயகம், மக்களாட்சி என்றால் இப்படி ஒருவரிடமோ ஒரு சிலரிடமோ பயம் இருக்கக் கூடாது. சர்வாதிகாரத்தில் தான் இப்படி நியாயமான கோரிக்கைகளை எடுத்துச் சொல்வதற்குப் பயப்படுவது வழக்கம். ஆனால் மக்களாட்சியில் இப்படி பயம் இருந்து வருவதால்தான் நொண்டி மாட்டு நிலை காணப்படுகிறது

ஆந்திரர்க்கு இவ்வகையான பயம் இல்லை ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆந்திரமாகாணத்திற்கு இன்னது, இன்னது செய்யப்பட வேண்டும், இன்ன இன்ன குறை உள்ளன என்று ஆந்திர மாகாணத்தில் பொறுப்பில் உள்ளவர்கள் பேசுகிறார்கள். எதிர்க்கட்சியார் பேசுவது ஒரு புறம் இருக்கட்டும்; ஆந்திர மாகா

ணைத்து அமைச்சர்கள் பேசுகிறார்கள். அவர்களின் குரல் ஒன்றுபட்ட பலம் உடையதாக இருப்பதால் மத்திய அரசாங்கத்தின் கருவியாகிய வானொலியும் அவர்களின் பேச்சின் கருத்தை எடுத்துரைக்கின்றது; எல்லா மாகாணங்களும் கேட்கும்படியாக ஆங்கில வானொலிப் பகுதியில் எடுத்துரைக்கின்றது. ஒற்றுமையுடையவர்களின் பலமான குரல்; ஆகையால், அதைப் புறக்கணிக்க முடிவதில்லை. தமிழ் நாட்டில் இத்தகைய குரல் எழுவதில்லை; பத்திரிகைகள் இவ்வாறு தொண்டு செய்வதும் இல்லை. "காக்கை வெள்ளையா? ஆமாம் மத்திய அரசே! காக்கை அப்பட்ட வெள்ளைதான்" என்று பின் பாட்டுப் பாடி விளம்பரம் செய்யும் பத்திரிகைகளே தமிழ் நாட்டில் செல்வாக்கோடு உள்ளன. காரணம் தமிழ் நாடு நொண்டி மாட்டு நிலையில் உள்ளது.

வாய் வளம்:

தமிழ் நாட்டில் இரண்டு மூன்று மாவட்டங்கள் தவிர, மற்றவை நீர்வளம் அற்றவை; மூளை வளம், வாய் வளம் தவிர மற்ற வளங்கள் பொதுவாகவே குறைவு. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அளவு கடந்து பெருகி வருகிறது. இந்த நிலையில் ஐந்தாண்டுத் திட்டங்களில் கொஞ்சம் கூடுதலான பங்கு கேட்க உரிமை இருக்கிறது என்பதைத் தமிழ்நாடு உணரவில்லை. வடநாட்டில் இந்தத் திட்டங்களின் பயனாக, வேலையில்லாத் திண்டாட்டம் பெரும்பாலும் ஒழிந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் தமிழ் நாட்டு நிலை நேர்மாறாக உள்ளது. இதை எடுத்துப் பேசுபவரும் இல்லை; நியாயமான வேண்டுகோள் விடுப்பருவம இல்லை. எப்படியோ மாடு மந்தையில் இருக்கிறது! மேய்கிறதா இல்லையா என்று யாரும் கவலைப்படவில்லை.

வியாபாரிகள் தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள். வடநாட்டார் இட்டதுதான் சட்டம், தமிழ் நாட்டு வியாபாரம் புறக்கணிக்கப்படுகிறது என்று பேசிக்கொள்கிறார்கள். ஒருவகை ஏகாதிபத்தியமே நடைபெறுகிறது. தலைவர் நேரு எல்லாவற்றையும் கவனிக்க முடியுமா? மற்றவர்களுக்கு அவரைப் போன்ற பெருந் தன்மை இருப்பதாகக் கூறமுடியவில்லை. நம் நாடு புறக்கணிக்கப்படுகிறது என்று பேசிக்கொள்ளுகிறார்கள்.

பெடரல் சர்விஸ் கமிசன் உத்தியோகங்களை அந்தந்த மாகாணத்தார் மாகாணப் பற்றோடு பெற்று வாழ்கிறார்கள் என்றும், தமிழ் நாட்டார் தம் போலிப் பெருந்தன்மையால் கோட்டைவிடுகிறார்கள் என்றும் பட்டதாரிகள் பேசிக்கொள்கிறார்கள். சிபாரிசும் செல்வாக்கும் வேண்டியவாறு செய்கின்றன என்றும் திறமையும் தகுதியும் மதிக்கப்படுவதில்லை என்றும் பேசிக் கொள்கிறார்கள்.

எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் மாகாண அரசாங்கம் செய்யக் கூடியது இல்லை என்றும் மத்திய அரசாங்கத்தின் விருப்பமே நிறைவேறக் கூடியது என்றும் மாகாண அரசாங்கம் உரிமை குறைந்த நகரமன்றம் (முனிசிபாலிடி) போல் ஆய்விட்டது என்றும் மக்கள் பேசிக்கொண்டு வருகிறார்கள். மாகாண மொழிப் பற்றும் இல்லாமல் மத்திய அரசாங்கத்தைக் காக்கை பிடிக்க வல்லவர்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் (தேர்தலில் தோற்றாலும்) கிடைப்பதை மக்கள் பார்த்துவருகிறார்கள். அதனால் அறிவாளிகளின் அறிவு தம் மாகாணத்திற்குத் துரோகம் செய்தாவது மத்திய அரசாங்கத்தைக் காக்கை பிடிப்பதில் முனைந்து வருவதாயும் உணருகிறார்கள். மத்திய அரசாங்கத்தைக் காக்கை பிடிக்கும் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், கலைக் கழகங்கள் மற்ற நிலையங்கள் இவற்றிற்கு மானியம் கிடைப்பதையும் மற்றவைகள் மொழிப் பற்று, மாகாணப்பற்றுடன் கிடந்து வாடுவதையும் காண்கிறார்கள்.

முதல் கடமை

நிலைமை இது; இதை மாற்றுவது, திருத்த முயல்வது கடமையாக உள்ளது; உண்மையான குறைகள் இருந்தால் அவற்றைப் போக்க வேண்டும். பொய்யான பேச்சுக்களாக இருந்தால் புள்ளிவிவரங்கள் எல்லாவற்றிற்கும் தந்து பொய் பொய்யெனக் காட்டி, மக்களுக்கு அறிவூட்டுவது நல்லது. இவ்வாறு செய்யாமல் குறைகளைப் போக்காமல் நொண்டி மாடாகவே நாட்டை விட்டிருந்தால் நல்லெண்ணம் குறையும். படை வல்லமையைக் காப்பதை விட மக்களின் நல்லெண்ணத்தைக் காப்பதே முதல் கடமை; மக்களாட்சிக்கு அதுவே இன்றியமையாத கடமை; காக்கைபிடிக்கும் மாந்தரையும் பின்பாட்டுப் பாடும் பத்திரிகைகளையும் நம்பாமல், போற்றாமல் ஒதுக்கவேண்டும்; அவர்களிடமிருந்து நாட்டைக் காக்க வேண்டும்; நாட்டு மக்களின் உரிமையையே பெரிதாகப் போற்றி அனைவர்க்கும் ஒத்த முன்னேற்றம் அளித்தல் வேண்டும்.

—டாக்டர் மு. வரதராசனார்.

(தமிழ் நாடு)

# நல்ல கல்வி

மக்களை மாக்களின் வேறுபடுத்தி உயிரினங்களுள் உயர்த்துவது அறிவு; அதை வளர்ப்பது கல்வி. இவ்வுண்மையையே கற்றனைத்தூறும் அறிவு என வள்ளுவரும் சொல்லுகிறார். அறிவை வளர்க்காதது கல்வியாகாது. அறிவு மக்களுக்கு இன்றியமையாதது. அறிவு மதிநுட்பமன்று. ஒட்பம் அல்லது மதிநுட்பம் அறத்திலும், புறத்திலும் ஒக்க இயங்கும் இறந்தது தீது விலக்கி நல்லதிலேயே செல்ல வைப்பது அறிவு; இதை,

"சென்ற இடத்தில் செலவிடாது
தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

என்னும் பொய்யில் புலவர் பொருளுரையால் தேறலாம். அவ்வறிவைத் தருவது கல்வியாதலால் அதன் அவசியத்தை மக்களுக்கு அறிஞர் வற்புறுத்துவர்.

மனிதர் தேவைதீர்த்துச் சிந்தை மகிழ்வித்தற்கு உதவுவது செல்வம்; எனில், செல்வம் நில்லாமல் கைமாறிச் செல்வது. பிறருக்குக் கொடுப்பதால் குறையவல்லது. செல்வம்போல் அல்லது செய்யும் கல்வி, தேடுபவரை விட்டு ஓடாதாகையாலும் பிறருக்குக் கொடுத்தால் குறையாதாகையாலும் கல்வி கேடில் விழுச் செல்வம் எனப் போற்றப் படுகிறது.

வெவ்வேறு வகை

பொறி உணர்வாலும் மதிநிறைவாலும் அறிவு பெருகும். இவ்விரு துறையிலும் அறிவைப் பெருக்குவது கல்வி. ஆயினும் ஒவ்வொரு துறைக்கும் உதவும் கல்வி வெவ்வேறு வகையில் அமைதல் வேண்டும். நாம் துணியும் அறிவுத் துறைக்குத் துணையாம் கல்வி வகையை முதலில் தேர்ந்து பிறகு மேற்கொள்வது நமது கடமை. எத்துறை துணியினும், எவ்வகை தேரினும் எதற்கும் முதலில் அடிப்படைக் கல்வி பொதுவி லிரண்டாகும். அவை எண்ணும் எழுத்தும் என்பர். எண்ணாவது கணக்கு; எழுத்தாவது செய்யுள் அல்லது இலக்கியம். இங்கு, செய்யுள் என்பது பாட்டை மட்டும் சுட்டாது. "பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல்" என்ற ஏழையும் குறிக்கும். அவ்விரு வகையிலும் செவ்வையாக அடித்தளமிட்டு, அதன்மேல் அவ்வவர் விரும்பும், வாழ்க்கையில் வளம் தரும், கல்வியை யாவரும் தேடுதல் வேண்டும். சிற்பியாகவோ சித்திரனாகவோ சிறக்க விரும்புவோர் தொல்காப்பியத்தைத் துருவுதல் வேண்டாம். மருத்துவராவோர் பொருத்தமில்லா வானநூல் பயிலுதல் வம்பாம். வேண்டும் பொருளொடு யாண்டும் சிந்தையின் நிறைவையும் தருவதற்கேற்ற கல்வியைப் போற்றிப் பயிலுதல் வேண்டும். சிந்தையின் நிறைவே நந்தாச் செல்வமாம். அது தராத கல்வி அளவிலாப் பொருள் தர உதவுமாயினும் நல்லதல்ல.

உள்ளத்திற்கு ஊக்கம்

கல்வி மதியைப் பெருக்கி ஒளியும் ஒட்பமும் தருவதோடு, உள்ளத்திற்கு உரனும் ஊக்கமும் உதவுதல் வேண்டும். நடத்தையைத் திருத்தாது, மதிக்கு நுதி தருவது படிப்பாகும்; கல்வியன்று. வழுவிலா தொழுகு மனவலி தருவதே கல்வி. கல்லாமலே, இயலறிவு ஓரளவு எவர்க்கும் உண்டு. எங்கும் ஏதமறியாதவர் எவருமில்லை. தீது புரிபவர்க்கும் தம் செயலின் தீமை தெரியும். எனினும் தீதை வெறுத்து விலக்கும் கல்வி அறிவின்மையால் தீது செய்வர். சரி என்று தெரிந்தபடி புரிந்தொழுக உதவுவதே கல்வி. நன்கு நடத்தைக்குதவாத நுண்மதி படைப்பது படிப்பு. நூல், பல நுணுகப் படித்த பெரும் படிப்பாளிகள் பலரை யாண்டும் பார்க்கலாம்; கற்றபடி நிற்க உள்ள உரம் பெற்றவரைக் காணுதல் அரிது. கல்வியறிவில்லாமல் மதிநுட்பம் அதிகமுடைய பெரும் படிப்பாளிகளும் வழுக்கி, ஒழுக்கமின்றி வாழக் காணலாம். கற்றறிவுற்றார் நடத்தையில் தெற்றுக் காண இயலாது. பழி, பாவம் அஞ்சுதல் தூய்மையிலே உள்ளம் துணிவு கொள்ளாமையால், தெரிந்தும் தீமை புரிவர். கற்றறிவுற்றோர் பாவத்திற்கஞ்சி முற்றிலும் அதனை வெறுத்து விலக்குவர். ஒழுக்கம் உதவாமல் வெறும் மதி வளர்க்கும் படிப்பு வேறு; நெறிபிறழா அறிவுதவும் கல்வி வேறு.

மக்கள் வாழ்வுக்குத் தக்க துணையாவது அறிவு தரும் நல்ல கல்வி. தொழிலிழிவுணர்த்துவது மெய்யறிவன்று. நல்ல கல்வியே மெய்யறிவு தரும்; சூழலும் தகுதியும் ஆழ நோக்கி, மானம் பேணி, தம் நிலை தனியாதுயரும் வழியில் வாழ வழி வகுக்கும் திறம்

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

மெய்யறிவால் வரும்; அவ்வறிவு தருவது நல்ல கல்வி. இலக்கியப் பயிற்சி தொழில் துறை முயற்சியை விலக்க வேண்டாம்; தொழிலாளர் கல்வியை வெறுக்க வேண்டாம். கல்வியில்லார் அறிவுக் குறைவாய் எந்தத் துறையிலும் மூந்த முடியாது. கல்வி, அறிவை வளர்த்து எதனையும் ஆராயத் தூண்டும்.

### மெய்யறிவு

கல்வி இல்லார்க்கும் மதி இயற்கை. வெறும் படிப்பே மதியைக் கூர்மைப்படுத்தும். ஆனால் மெய்யறிவு (Wisdom) வெறும் படிப்பால் ஏற்படாது. அது கல்வியால்தான் பிறக்கும்; சிறக்கும். கல்வி, அறிவைக் கூர்மைப்படுத்துவது மட்டுமல்ல; ஓர்மைப் படுத்தவும் உதவும். ஒரு நிலைப்பட்டு நில்லாத அறிவு எதையும் சிந்திக்கவோ, ஊன்றி ஆராயவோ பயன்படாது. நீண்ட நிதான ஆராய்ச்சி யாண்டும் மலைவகற்றி நிலைத்த உண்மை காணுதற்கு வேண்டும்; அதற்குரிய ஆழ்ந்த அறிவு வெறும் படிப்பால் நிலவாது; நல்ல கல்வியே ஆயுமாழ்ந்தகன்ற அறிவு தரும். எதையும் தெரியு மதிநுட்பம் படிப்பே தரும். தெரிந்தும் வினைப்படா ஒட்பத்தால் மக்களுக்கு ஒன்றும் நன்றில்லை. ஆள்வினை உடைமை இன்றியமையாதது. அது தரும் அறிவு கல்வியால் மட்டுமே உண்டாகும்.

ஒட்பம் உதவும் படிப்பே தற்காலக் கல்லூரிகள் தருகின்றன. அதனால் படித்தவர் பலவும் தெரிவர். ஆனால் பயன் அதிகம் பெறுவதில்லை. படிப்பால் பட்டமும் பதவியும் பெறுவார் பலரை நாளும் பார்க்கிறோம். ஆயினும் ஆக்கமடையும் ஊக்கமுடையாரைக் காணல் அரிதாகிறது. விரிவுரையாளரும் பெருங்கதை வாணரும் பெருகிப் பார்க்கிறோம்; அருஞ் செயலாளர் தமிழகத்தில் அருகி வருகின்றனர். தமிழகத்தில் பெயரில்லாப் பாவலர்க்கும் நாடறியா நாவலர்க்கும் பஞ்சமில்லை. என்றாலும் சென்ற சில நூற்றாண்டாய்க் கம்பரைப் போல், வள்ளுவர்போல் இறவாத நூலியற்றும் திறனுடையார் ஒருவருமே இருந்ததில்லை. புலவருலகில் அழிப்பதிகம். காப்பும் அற இறக்கவில்லை; படைப்பெங்கும் நடைபெற நாம் பார்த்ததில்லை; கல்வியாகாப் படிப்புதான் இதற்கெல்லாம் காரணமாம்; வாழ்விலெழும் புது நிலைகள் எதுவெனினும் தாழாது தளராது நின்றோம்பும் அறிவாண்மை கல்வி தரும்; வெறு மதியால் அத் திறமை பெறவொண்ணாது.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்; எம். ஏ. பி. எல்.
(தமிழ் நாடு)

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வரதத்தைக் கொடுத்தருளினார்கள் என்பதாம். (இது சென்னை அரசாங்கத்தார் பதிப்பித்த ஆனந்தரங்கம் பிள்ளை டைரி, வால்யம் ஒன்று, பக்கம் 264-ல் உள்ளது.)

### ஏழாவது பட்டம்

மாத்தூர் சிவஞானபாலய சுவாமிகள் என்பவர்கள் கி. பி 1747 முதல் 1761 முடியப் பதினைந்தாண்டுகள் பட்டாதிகாரியாக விளங்கினார்கள். இவர்கள் பல தலங்களுக்கும் யாத்திரை செய்திருக்கிறார்கள். அக்காலத்து விளங்கிய நவாபு, சுவாமிகளுக்கு யாத்திரைக் காலத்து வேண்டிய நன்மைகளைச் செய்யும்படி தன்னுடைய கீழ் அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறார்.

### எட்டாவது பட்டம்

குமாரச் சார்வாய் சிவஞான பாலய சுவாமிகள் என்பவர் கி. பி 1762 முதல் 1770 முடிய 9 யாண்டுகள் பட்டாதிகாரியாக விளங்கினார்கள்.

### ஒன்பதாவது பட்டம்

வி. சிவகுன்றம் சிவஞான பாலய சுவாமிகள் என்பவர்கள் கி. பி. 1771 முதல் 1773 முடிய மூன்று யாண்டுகள் பட்டாதிகாரியாக விளங்கினார்கள்.

### பத்தாவது பட்டம்

விருத்தாசலம் சிவஞானபாலய சுவாமிகள் என்பவர்கள் கி. பி. 1774 முதல் 1784 முடிய 11 யாண்டுகள் பட்டாதிகாரியாக விளங்கினார்கள்.

### பதினோராவது பட்டம்

சிதம்பரம் சிவஞானபாலய சுவாமிகள் கி. பி. 1785 முதல் 1809 முடிய 25 யாண்டுகள் பட்டாதிகாரியாக விளங்கினார்கள்.

### பன்னிரண்டாவது பட்டம்

கல்யாணப் பட்டணம் விருபாக்ஷ சிவஞான பாலய சுவாமிகள் என்பவர்கள் கி. பி. 1810 முதல் 1817 முடிய 8 யாண்டுகள் பட்டாதிகாரியாக விளங்கினார்கள்.

### பதின்மூன்றாம் பட்டம்

விருத்தாசலம் சிவஞானபாலய சுவாமிகள் என்பவர்கள் பதினெட்டுநாள் பட்டாதிகாரியாக விளங்கினார்கள்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# மயிலம் திருமடம்

## மூன்ருவது பட்டம்

(முன் தொடர்ச்சி)

(இந்தப் பட்டத்திற்குரியவர்கள் நல்லாற்றூர், சிதம்பரம் இரு இடங்களிலிருந்தே வந்திருக்கிருர்கள். ஆனுல் இவர்கள் பட்டத்திற்கு முந்தி, கல்வி முதலியவற்றை உத்தேசித்து வெளியூர்களுக்குச் சஞ்சாரம் செய்வதுண்டு. அப்போது அவர்கள் இறுதியாகத் தங்கியிருந்த ஊரின் பெயரால் அந்த சுவாமிகள் வழங்கப்படுவார்கள். உதாரணம்: குண்ணம்பாளையம் சிவஞான பாலைய சுவாமிகள், கந்தப்பனூர் சிவஞான பாலைய சுவாமிகள், கறையாம்புத்தூர் சிவஞான பாலைய சுவாமிகள், மாத்தூர் சிவஞான பாலய சுவாமிகள், கல்யாணப்பட்டணம் சிவஞான பாலைய சுவாமிகள் முதலியோர்களாவர்.)

குண்ணம்பாளையம் சிவஞான பாலைய சுவாமிகள் மூன்ருவது பட்ட அதிகாரியாகவிளங்கினர். இவர்கள் வீற்றிருந்த காலம் கி. பி. 1645 முதல் 1695 முடிய 51 யாண்டுகள் என்பர். இவர்கள் காலத்தில் இலக்கண விளக்க ஆசிரியரும் திருவாரூர்த் தமிழ்ப் பெரும் புலவருமான ஸ்ரீ வைத்யநாத தேசிகர் என்பவர் மடத்திற்கு வந்து சுவாமிகளைத் தரிசனம் செய்து, பாசவதைப் பரணி என்ற நூலையும், மயிலம் முருகப் பெருமான் மீது பிள்ளைத் தமிழ் என்ற நூலையும் பாடியிருக்கிருர். இவர் பாடிய பாசவதைப்பரணியைப்பிரம்மஸ்ரீ மகாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி—டாக்டர். உ. வே. சாமிநாத அய்யரவர்களும் அச்சிட்டிருக்கிருர்கள். பாசவதைப் பரணி யென்னும் நூலானது மிகவும் சொல் நயம் பொருள் நயத்தோடு பாடப்பட்டதாகும்.

தேசிகர் பாடின முருகன் பிள்ளைத் தமிழை 18வது குருமூர்த்தியாய் விளங்கியருளும் சிவஞான பாலய சுவாமிகள் வெளியிட்டிருக்கிருர்கள். பிள்ளைத்தமிழ் சிறுதேர்ப்பருவம் முதற் செய்யுளில், பாசவதைப் பரணியின் வரலாறு முழுவதையு மடக்கிக் கூறியுள்ளார். இன்னும் பல நயங்களைக் கொண்டு திகழ்வது மயிலம் முருகன் பிள்ளைத் தமிழ்.

## நான்காவது பட்டம்

நான்காவது பட்டாதிகாரியாக விளங்கிய சுவாமிகள் சிதம்பரம் சிவஞான பாலய சுவாமிகள். ஆதி சிவஞான பாலய சுவாமிகள் தில்லைக்குச் சென்றிருந்தபோது தங்கியிருந்த விடத்திற்குப் பாலய்யர் மடம் என்று பெயர். இப்போது அந்தத் தெருவிற்குப் பாலையர் மடத்துத் தெரு என்று பெயர் வழங்கப்படுகிறது. அந்த சுவாமிகள் பிரதிட்டை செய்த சுந்தரமாயுள்ள வல்லபை விநாயகர் கோயில் இப்போதுமிருக்கின்றது. அக் கோவில் பாலய்யர் மடத்திலிருந்து, நான்காவது பட்டமாக வந்த சுவாமிகளின் சந்ததியாராலேயே பூஜிக்கப்பட்டுப் பாதுகாப்பில் நாளைய வரையிலிருந்து வருகிறது. சிதம்பரம் பாலைய சுவாமிகளென்பவர்கள் எல்லாம் இந்தக் கோத்திரத்திலிருந்து வந்தவர்களேயாவர். இப்போது குருமூர்த்தியாய் எழுந்தருளியுள்ள 18ம் பட்டத்துச் சுவாமிகளும், மேற்கூறிய சிதம்பரம் பாலையர்மடத்துத் தோன்றியவர்களேயாவர். மேற்படி பரம்பரையினர் அக்கோயிலை ஜீர்ணோத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்தும் வந்துள்ளார்கள். இந்த சுவாமிகள் காலம் கி. பி. 1696 முதல் 1727 முடிய 32 யாண்டுகளென்பர்.

## ஐந்தாவது பட்டம்:

கந்தப்பனூர் சிவஞான பாலய சுவாமிகளென்பவர்கள் கி. பி. 1728 முதல் 1733 முடிய ஆறு யாண்டுகள் பட்டாதிகாரியாக விளங்கியருளினர்கள்.

## ஆருவது பட்டம்

கறையாம்புத்தூர் சிவஞான பாலய சுவாமிகள் என்பவர்கள் கி. பி. 1734 முதல் 1746 முடிய 13 யாண்டுகள் பட்டாதிகாரியாக விளங்கியருளினர்கள். இவர்கள் காலத்து டுப்ளே என்ற பெயர் பெற்ற பிரஞ்சு கவர்னர் சுவாமிகளைப்பேட்டி கண்டு ஆசீர்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்

நூலாடைகளுக்கும்

சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வாதம் பெற்றுப் போயிருக்கிறார் என்பதனை, பிரஞ்சு கவர்னரின் ஏஜண்டாகவிருந்த ஆனந்தரங்கம் பிள்ளை டைரியால் தெரியலாம். அந்த நாட்குறிப்பில் எழுதியுள்ள தாவது:—

1744 ம் வருஷம் டிசம்பர் மாதம் 14வ திங்கட்கிழமை (ராக்ஷச வருஷம் மார்கழி மாதம் 3-ம் தேதி) இன்று காலை 6 மணிக்கு, மூண்டாண்டிச் சாவடியிலிருந்து கவர்னர் டூப்ளே என்னுடைய சத்திரமாகிய திருவேங்கடபுரத்திற்கு வந்து காலை 8 மணிக்குக் காலையுண்டியருந்தி, பகலுந் தங்கி மாலை 4 மணிக்குப் பொம்மயபாளைய மடத்திலுள்ள பாலய சுவாமியாரவர்களுக்குப் பேட்டியளிக்கச் சென்றார். கவர்னரும் அவருடைய மனைவியும் சுவாமிகளுக்கு 6 கெஜ நீளமுள்ள விசாலமான துணியும், 2 பன்னீர் பாட்டில்களும் கொடுத்து மரியாதையாகப் பணிந்து சலாம் செய்தார்கள். பிறகு சுவாமிகள் அவர்களுக்குத் தன் ஆசீர்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பதினைன்வது பட்டம்

சிதம்பரம் சிவஞானபாலய சுவாமிகள் என்பவர்கள் கி பி 1818 முதல் 1843 முடிய 26 யாண்டுகள் பட்டாதிகாரியாக விளங்கினார்கள். இவர்கள் பொம்மயபாளையம் மடத்தில் முன் மண்டபமும் நடு மண்டபமும் கட்டியருளினார்கள். இவர்கள் உருவச் சிலை நடு மண்டபத்தில் கருங்கல் தூணில் அமைக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் காலத்துக் கிழக்கிந்திய கம்பெனியாரால் இந்த மடம் தகுந்த மரியாதைகளைப் பெற்று வந்தது. 1826-ம் ஆண்டு அக்டோபர்மீ 16-ந் தேதி C. D. டர்ஜி துரையவர்கள் மஞ்சக்குப்பத்தில் தங்கியிருந்தபோது எல்லாப்போலீஸ் தாசில்தார்களுக்கும், போலீஸ்களுக்கும், அமீனுக்களுக்கும், கொத்தவால்களுக்கும், கிராம முனிசீப்புக்களுக்கும், மற்றும் பலருக்கும் உத்தரவு பிறப்பித்ததாவது: வழுதாவூர் உதவி ஜில்லாவிலுள்ள பொம்மயபாளைய மடத்திலும் மயிலம் மடத்திலும் வசிக்கும் சுவாமிகள் தங்களுடைய விருதுகளுடன் பிரயாணம் செய்யும்போது, மிருகம், கொள்ளைக்காரர், துஷ்டர் முதலியவர்களால் துன்பமுண்டாகாதபடி பாதுகாத்துக்கொள்ள வேண்டியது என்பதை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பதினைந்தாம் பட்டம்

நல்லாற்றூர் சிவஞான பாலய சுவாமிகள் என்பவர்கள் கி பி. 1844 முதல் 1887 முடிய 44 யாண்டுகள் பட்டாதிகாரியாக விளங்கினார்கள். இவர்கள் காலத்திலேதான் தற்போதுள்ள கோபுரம் கட்டப்பட்டது. உற்சவ சபா மண்டபமும் இவர்களால் கட்டப்பட்டது. இந்த சுவாமிகளினுடைய வடிவம், கோபுரத்தின் வாயிற் படியின் வடபுறத் திசைச் சுவரிலும் சபாமண்டபம் கற்றூணிலும் செதுக்கப்பட்டுள்ளது. இவர்கள் காலத்துத் திருமுதுகுன்றம் தியாகராஜ கவி என்பாரால் வடமொழியிலிருந்த மயிலம் தலபுராணம் தமிழில் பாடப்பட்டது. அதனை இரண்டாவது பதிப்பாக 18-ம் பட்டமாக இப்போது எழுந்தருளியிருக்கிற சுவாமிகள் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறும் பட்டம்

பதினைந்தாம் பட்டத்து சுவாமிகளின் பூர்வாசிரமத்து இளைய புதல்வரான இரண்ய சபாபதி அய்யர் என்னுமியற் பெயருடையவர்கள் 16-ம் பட்டத்துச் சிவஞான பாலய சுவாமிகளாக, கி பி. 1888 முதல் 1916 முடிய 29 யாண்டுகள் விளங்கினார்கள். இவர்கள் காலத்துக் கோயிலில் புதுமண்டபம், மேற்புறம் சபை, சுற்றுமதில் வாகன மண்டபங்கள், வாகனங்கள், பல திருவாபரணங்கள் முதலியன செய்யப்பட்டன இவர்கள் மயிலம் மலையடிவாரத்தில் சந்நிதித் தெருவில் வருமானத்திற்குரிய கட்டடங்களும் மயிலம் மடத்தில் பின்புறம் கட்டடங்களும் கட்டினார்கள். பொம்மபுரத்தின் மடத்தில் இவர்கள் மாடியும் பின்புறக் கட்டிடமும் மடத்துத் தெருவில் வடபக்கத்தில் கட்டப்பட்டிருக்கும் கட்டடங்களும் எதிரில் பாடசாலைக் கட்டிடமும் கட்டினார்கள். சில நஞ்செய்கள் மடத்திற்கும் தேவஸ்தானத்துக்கும் வாங்கினார்கள். இவர்கள் காலத்திற்றான் தண்டபாணி சுவாமிகள் மயிலாசலக் கலம்பகம் பாடி அருளினார்கள். பாம்பன் சுவாமிகள என்கிற குமாரகுருதாச சுவாமிகள். கி பி. 1900 சார்வரி ஆவணி 29 குருவாரம் மயிலம் வந்து முருகன் மீது தோத்திரப்பாக்கள அருளிச் செய்தனர்.

பதினேழாவது பட்டம்

பதினாறும் பட்டத்து சுவாமிகளின் பூர்வாசிரம மூத்த புதல்வரான பொன்னுசாமி அய்யர் என்கிற முருகையர் என்னுமியற் பெயருடையவர்கள் பதினேழாம் பட்டத்துச் சிவஞான பாலய சுவாமிகளாகக் கி. பி. 1917 முதல் 1927 முடியப் பதினோராண்டுகள் விளங்கினார்கள். இவர்கள் காலத்து நந்தவனம் சீர்திருத்தமடையப் பெற்றது.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)